# ஆகஸ்ட் 2 - புனித வெர்செல்லி யுசேபியஸ் (283-370)




இவருடைய தந்தை வேதத்திற்காக உயிரைத் தியாகம் செய்தவர். இவர் சிறுவனாக இருக்கும்போது தம் தாயுடனும் சகோதரனுடனும் உரோமைக்குச் சென்றார். அங்கே இவருக்குச் சிறந்த கல்விப் பயிற்சி கிடைத்தது. பாப்பானவர் இவருக்கு ஒரு பட்டம் கொடுத்தார். பின்னர் இவர் வேர்செல்லி நகருக்குப் போய் அங்குள்ள குருக்களுடன் சேர்ந்து திருப்பணி புரிந்தார். இவர் ஆயரான பின் குருக்களோடு சோந்து துறவற வாழ்வு நடத்தினார். இவரது பேரும் கீர்த்தியும் பரவியது. இவருடைய சீடர்கள் இவரை தங்கள் மறைமாவட்டங்களுக்கு ஆயராக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். பாப்பானவர் இவருக்கு ஒரு சங்கத்தைக் கூட்டுவதற்குரிய பணியைக் கொடுத்தார். சங்கத்தில்ஆரிய பகதர்கள் புனித அத்தனாசியுஸ் என்னும் ஆயருக்கு தவறான தீர்ப்பு கூறினார்கள். அதற்கு புனிதர் இணங்கவில்லை. எனவே கோபம் கொண்ட பேரரசன் இவரை நாடு கடத்தினான். பரதேசத்திலும் பதிதர்களால் இவர் துன்புறுத்தப்பட்டார். பேரரசன் இறந்ததும் இவர் நாடு திரும்பினார். பல ஊர்களுக்குச் சென்று விசுவாசிகளை ஊக்குவித்தார். புனித இலாரி என்பருவடன் சேர்ந்து ஆரிய பதித ஆயர் ஒருவரை எதிர்த்ததர்.

**<u>சிந்தனை:</u>**

அபத்தக் கொள்கைகளுக்கு நாம் ஒருபோதும் ஆதரவு தரக் கூடாது. அது பரவாதபடி தடுக்க நம்மால் ஆனவற்றைச் செய்ய வேண்டும்.

**<u>செபம்:</u>**

ஆண்டவரே, எல்லா ஆயர்களும் பாப்பானவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வரத்தைத் தாரும்.